# SCIENCE TODAY®

FOR TOMORROW

பல்கலைக்கழக துறைசார் வல்லுனர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் இலங்கையின் முதல் விஞ்ஞான சஞ்சிகை

க.பொ.த உயர்தர விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்குரிய சஞ்சிகை

VENTURE PUBLICATION

இதழ் 05 - 2015

ISSN 2279 - 1744

**2014ம் ஆண்டு பௌதிகவியல் வினாத்தாள் பற்றிய நேர்காணல்**

Prof. S. R. D. Rosa
Head
Dept. of Physics,
University of Colombo

**2014ம் ஆண்டு உயிரியல் வினாத்தாள் பற்றிய விளக்கம்**

Prof. Nazera Salim
Head,
Department of Botany,
University of Sri Jeyawarthanapura

**இராசாயனவியல் கற்பது எவ்வாறு**

Prof. O. A. Ileperuma
Dean,
Faculty of Science
University of Peredeniya

**கைத்தொழில் இரசாயனவியல்**

Prof. Sudantha Liyanege
Dean,
Science Faculty,
University of Sri Jeyawarthanapura

**2014ம் ஆண்டு இரசாயனவியல் வினாத்தாள் பற்றிய விளக்கம்**

Dr. Pirashantha Malavarachchi
Department of Chemistry
University of Sri Jeyawardenapura

**சூழல் மாசடைதல்**

Dr. M. Surathissa
Department of Zoology,
University of Colombo

**உயர்தர பரீட்சை உயிரியல் வினாத்தாளிற்கு வெற்றிகரமாக விடையளிப்பதற்கு...**

Dr. Hiran Amerasegara
Department of forestry & Environmental science,
University of Sri Jeyawarthanapura

**பல்கலைக்கழக கற்கை நெறிகள்**

**NDT CIVIL ENGINEERING**

Rs. 120/-

பௌதிகவியல், உயிரியல், இணைந்த கணித பாடங்களின் மாதிரி வினாத்தாள்கள் உள்ளடக்கம்

BMS make learning happen

ESOFT Shaping Lives, Creating Futures.

WISDOM

9 772279 174003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Page
http://www.facebook.com/sciencetodaymagazine

இதழாசிரியர்
சோ. குணாகரன்
[B.Sc. in IT]

திட்ட ஆலோசகர்
சொ. சோதிலிங்கம்
[B.Sc. Spl, P.G.D. in Edu.]

பேராசிரியர் குழாம்
Prof. S.R.D Rosa
Prof. O. A. Ileperuma
Prof. Nazera Salim
Dr. Balo Daya
Prof. Sudantha Liyanege
Dr. Hiran Amerasegara
Dr. Soorathissa
Prof. Sudantha Liyanage
Dr. Sanjeewa Perera
Dr. Pirashantha Malavarachchi

மொழிபெயர்ப்பு
கி. அருனேசர்

பதிப்பகம்
G Venture Publication
தொ.இல. 0771 871 078

புத்தக, கணணி வடிவமைப்பு
ஜெ. அனந்தன்

அச்சகம்
GAYATHRI PUBLICATION
Kalubowila, Dehiwela
தொ.இல. 0777 421 598

# Editorial



## Editorial Note

2014 ம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சையை வெற்றிகரமாக முகம் கொடுத்து, தமது அடுத்த கட்ட வாழ்வில் அடியெடுத்து வைத்திருக்கும் மாணவர்கள் ஒருபக்கம்,2015 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் ஒரு பக்கம் இவ்வாறான மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக Science Today இதழ் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர்களின் 2014 ஆம் ஆண்டு பரீட்சை வினாத்தாள் மற்றும் விளக்கங்கள் மற்றும் 2015ம் ஆண்டு தோற்றவிருக்கும் மாணவர்களிற்கான வழிகாட்டல் ஆக்கங்கள் அத்துடன் மாதிரி வினாத்தாள்கள் என்று எல்லா விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது இவ்விதழ்.

இதழாசிரியன் என்ற வகையில் இவ்விதழ் எனக்கு சிறப்பான மறக்கமுடியாத இதழாகும். ஏனெனில் எமது பேராசிரியர் குழாமில் புதிதாக இணைந்து கொண்ட மூன்று பேராசிரியர்களின் ஆக்கங்களுடன் இவ்விதழ் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. தமது சிரமங்களுக்கு மத்தியிலும் மாணவர்களின் நலன் கருதி தமது பங்களிப்பை தந்து வரும் பேராசிரியர்களுக்கு எனது தனிப்பட்ட நன்றிகள்.

இதழ் நான்கு கூடுதலான பயிற்சி வினாக்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. ஏனெனில் பரீட்சையை கருத்தில் கொண்டு ஆனால் இவ்விதழ் பரீட்சை வினாத்தாள் விளக்கங்களையும் பேராசிரியர்களின் வழிகாட்டுதல்களுடனும் வெளிவருகின்ற அதே சமயம் இவ்விதழிலும் மாதிரி வினாத்தாள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது. எனவே Science Today இதழ் 5 2015ஆம் ஆண்டு மாணவர்களிற்கு பயன்படுவதோடு 2014ம் ஆண்டு பரீட்சையை முகம் கொடுத்த மாணவர்களுக்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

இதழாசிரியர்
சோ. குணாகரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் உடனான நேர்காணல்



**Prof. S. R. D. Rosa**
Head
Dept. of Physics,
University of Colombo

## பல்தேர்வு வினாக்கள் சற்று கடினமானதாக அமைந்துள்ளதாக மாணவர்களது கருத்து அமைந்துள்ளது

**1. 2014ம் ஆண்டு வினாத்தாள் பற்றி மாணவர்களுக்கு நீங்கள் கூறும் கருத்து என்ன?**

இம்முறை பௌதிகவியல் வினாத்தாளை வெற்றிகரமாக முகம் கொடுத்திருப்பீர்கள் என்றே நினைக்கின்றேன் வினாத்தாள் பற்றி இலகு மற்றும் கடினம் என மாறி மாறி கருத்து வெளிப்பட்டிருந்தாலும் மாணவர்கள் இலகுவாக முகம் கொடுக்கக் கூடியதாகவே அமைந்திருந்தது. அதாவது பகுதி I சில மாணவர்கள் கடினம் என்று கூறுகிறார்கள். ஆனால் பகுதி II I அவர்கள் இலகு என கூறவில்லை ஆனால் பகுதி II என்னை பொறுத்த வரையில் இலகுவாகவே அமைந்திருந்தது. எனவே இம்முறை வினாத்தாளை முகம் கொடுத்திருக்கும் சராசரி மாணவன் ஒருவன் இவ்வினாத்தாளை வெற்றி கொள்வான் என்பதில் சந்தேகமில்லை.

**2. பகுதி I கடினமாக இருப்பதாக இருப்பதாக பொதுவான கருத்து இது பற்றி நீங்கள் கூறுவது?**

பொதுவான கருத்து அவ்வாறு தான் உள்ளது. ஆனால் கடந்தகால வினாக்களை போலவே இம்முறை வினாக்களும் அமைந்திருந்தது என்பதனை மாணவர்கள் உணர வேண்டும். நான் வழமையாக கூறுவத போல கடந்தகால 10 வருட வினாக்காளை பரீட்சியம் செய்த ஒரு மாணவனிற்கு இவ் வினாத்தாள் கடினமாக இருக்காது என்பதே என் கருத்து அத்துடன் ஒரு சராசரி மாணவன் 40 வினாக்களை சரியாக செய்யலாம் என்பது எனது கருத்து. ஆனால் நான் அறிந்த வரையில் மாணவர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் கணிப்புக்களை மேற்கொள்ளுவதனால் அதிக நேரத்தை செலவிடுவதாகவும் அதன் காரணத்தினாலே மாணவர்களால் குறித்த நேரத்தில் வினாக்களுக்கு விடையளிக்க முடியவில்லை என்பதும் நான் அறிந்து கொண்டது. ஆனால் நான் வழமையாக சொல்வது போல் வினாக்களுக்கு கணிப்புக்களை மேற்கொள்ளானது விலக்கல் முறை மூலம் (Elimation Method) இலகுவாக செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. பல்தேர்வு வினாக்களை பொறுத்த வரை வினாக்கள் பந்தி வடிவத்தில் அமைந்திருந்ததாக மாணவர்கள் கருத்து தெரிவித்தனர் இது பற்றி தாங்கள் கூறுவது?**

என்னால் இதற்கு எவ்வாறு பதில் சொல்வது கடந்தகால வினா பத்திரங்கள் பகுதி I 10 பக்கங்களை கொண்டதாகவே அமைந்திருந்தன அதேபோல் இவ்வினாத் -தாலும் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தான் என்னால் கூறமுடியும்.

**4. அமைப்பு கட்டுரை வினா பற்றி உங்கள் கருத்து**

மிகவும் இலகுவாகவே அமைந்திருந்தது அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட வேணியர் முதலாவது அமைப்புக் கட்டுரை வினாவாக அமைந்திருந்தது. எனவே எல்லோராலும் இலகுவாக இவ் வினாவை கடந்திருக்கமுடியும். இதே போலஉருகல் மறை வெப்பம் காணல் திருசியமாணி மற்றும் தடை காணல் ஆகிய வினாக்களும் மாணவர்களால் எளிதாக விடையளிக்கும் விதமாகவே அமைந்திருந்தது.

**5. கட்டுரை வினாக்கள் பற்றி?**

இவையும் நான் மேலே சொன்னத போலவே இலகுவான வினாக்களாகவே அதாவது மொத்தத்தில் பகுதி II இலகுவாகவே அமைந்திருந்தது. எனவே தாமாக வினாக்களுக்கு விடையளிக்க பழகியிருந்த மாணவர்கள் இம்முறை வினாத்தாளை வெற்றி கண்டிருப்பார்கள் என்பதே என் கருத்து.

**6. இம்முறை வினாத்தாளில் புதிய விடயங்களில் இருந்து கேள்விகள் அமைந்திருப்பதாக (ஒரு சில கேள்விகள்) தெரிகிறத இது பற்றி நீங்கள் கூறுவது?**

அவ்வாறு புதிய விடயங்களில் இருந்து எவையும் அமைந்திருக்கவில்லை எல்லா வினாக்களுமே பாடப் புத்தகத்தில் இருந்து தான் அமைந்துள்ளது. மாணவர்கள் அவற்றை கற்காமல் விடுத்து இவ்வாறு கூறுவது சரியல்ல அதே நேரம் அவ்வாறான புதிய வகை வினாக்கள் ஒரு மாணவனை பாதிக்காத வண்ணமே பகுதி I லும் பகுதி II லும் அமைந்திருந்தது. அதில் பகுதி II ல் அவ்வாறான வினாக்களைவிடுத்து மற்றைய வினாவை செய்வதற்கு வாய்ப்புக்களும் உள்ளன. அத்துடன் அவ்வாறான வினாவினை எடுத்துக் கொண்டால் அதில் இறுதியில் ஒரு பாகுதியாகவே கேட்கப்பட்டிருந்தது.

குறிப்பிடத்தக்கது எனவே ஒரு மாணவனிற்கு நூற்றிற்கு ஒரு புள்ளியை மட்டுமே பாதிக்கும் ஆனால் இவ் புதுவகை வினாக்கள் பாடப்பரப்பில் அடங்கியுள்ளது. குறிப்பிடத்தக்கது ஆக இலங்கையில் முதலாம் இடத்திற்கு வர முயற்சி செய்யும் மாணவர்களிற்கே இது சவாலாக அமைந்திருக்கும் ஆனாலும் சரியான ஆசிரியரிடம் கற்றிருந்த மாணவர்கள் இவ்வாறு கருதது வெளியிட்டிருக்கமாட்டார்கள். அதே போல பல்கலை கழகம் நுழைவதற்கு எண்ணி கற்கும் மாணவர்கள் புத்திசாலிதனமாக செயற்பட்டிருப்பார்கள் என்பதை எனது கருத்து. அதாவது அவற்றை விலக்கி ஏனைய வினாக்களுக்கு முகம் கொடுத்திருப்பார்கள்.

எனவே எனது முடிவான கருத்து மாணவர்களிற்கான வினாக்களை நாங்கள் தயாரிப்பதற்கான விண்கலம் ஏறி வெளிக்கிரகங்களுக்கு சென்று புதிய வினாக்களை கொண்டு வரவது இல்லை. எனவே கடந்தகால வினாக்களை செய்து பழகியிருந்த மாணவர்கள் மற்றும் பல்தேர்வு வினாக்களுக்கு இலகுவாக வலக்கல் முறை மூலம் செய்திருந்த மாணவர்கள் வினாத்தாளை வெற்றி கண்டிருப்பீர்கள் என்பதே எனது கருத்து பரீட்சைக்கு முகம் கொடுத்த அனைத்து மாணவர்களது எதிர்காலம் பிரகாசமாக அமைய எனது வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PHYSICS MODEL PAPER

## பகுதி I

1) சக்தியானது $w = bf - 1/2av^2$ இனால் தரப்படும் சமன்பாட்டில் f அதிர்வெண்ணாகவும், v வேகமாகவும் ஆக இருந்தால் b/a இன் பரிமாணமானது?

(1) $ML^2T^{-1}$ (2) $M^2L^2T^{-1}$ (3) $L^2T^{-1}$ (4) $L^2T^{-3}$ (5) $LT^{-2}$

2) விளையாட்டு வீரனொருவனுக்கு பந்தொன்றினை கிடையாக வீசக் கூடிய ஆகக் கூடிய கிடைத்தூரம் 100m ஆகும். அதே விசையை உபயோகித்து அவனுக்கு அப்பந்தினை நிலைக்குத்தாக வீசக்கூடிய அதி உயர் உயரம்

(1) 50m (2) 60m (3) 70m (4) 80m (5) 90m

3) ஒப்பமான பனிக்கட்டித் தளம் ஒன்றின் மீது நிற்கும்(M) திணிவுள்ள சிறுவனின் கையிலுள்ள m திணிவுள்ள பந்தொன்றினை (M>m) கிடையாக வீசுகின்றான். இதன் காரணமாக சிறுவனுக்கு வேகம், உந்தம் மற்றும் இயக்கச்சக்தி ஆகியன கிடைக்கப் பெறுகின்றன. பந்திற்கு கிடைக்கப் பெறும் இக் கனியங்களுடன் ஒப்பிடும் போது சிறுவன் பெற்றுக் கொள்ளும் இக் கனியங்களின் பருமன் தொடராக கீழ் குறிப்பிட்ட எது சரியாகும்?

| | வேகம் | உந்தம் | இயக்கசக்தி |
|---|---|---|---|
| 1 | சமமாகும் | சமமாகும் | சமமாகும் |
| 2 | சிறியது | சமமாகும் | சமமாகும் |
| 3 | சிறியது | சிறியது | சமமாகும் |
| 4 | சிறியது | சமமாகும் | சிறியது |
| 5 | சமமாகும் | சமமாகும் | சிறியது |

4) வெவ்வேறான அடர்த்தியுடைய திரவங்கள் இரண்டின் சம கனவளவினை கலந்த போது கலவையின் சாரடர்த்தி 4 ஆக இருந்ததோடு, அத்திரவங்களின் சமத் திணிவுகளை கலந்த போது சாரடர்த்தி 3 ஆக விருந்தது. திரவங்கள் இரண்டினதும் சாரடர்த்தி முறையே.

(1) 6,2 (2) 3,4 (3) 2,5 (4) 7,3 (5) 8,1

5) கடல் மட்டத்திலிருந்து 50m உயரத்தில் இருக்கும் மின் உற்பத்தி நிலையத்திற்கு நீரினை வழங்கும் அணைக்கட்டானது அமைந்திருப்பது கடல் மட்டத்திலிருந்து 550m உயரத்திலாகும். அதிலிருந்து வெளியேறும் நீரானது வினாடிக்கு 2000kg வேகத்தில் Turbine ஊடாக செல்கின்றது. மின் உற்பத்தி நிலையத்தின் திறன் 80%மானால் மின் உற்பத்தி நிலையத்தில் பிறப்பிக்கப்படும் மின்சாரத்தின் அளவு

(1) 8MW (2) 10MW (3) 12.5MW (4) 16MW (5) 12MW

6) இரு முனைகளும் இணைக்கப்பட்டுள்ள சீரான இழையின் இழுவிசை T ஆகவுள்ள போது, ஒரு முனை மூடப்பட்டுள்ள குழாயின் அடிப்படை சுரம் ஒன்றில் பரிவு ஏற்படுகிறது. குழாயின் முதலாம் மேற்றொனியின் சந்தர்ப்பத்தோடு பரிவு ஏற்பட வேண்டுமாயின் இழையிற்கு இருக்க வேண்டிய இழுவிசையானது?

(1) 2T (2) 3T (3) 4T (4) 6T (5) 9T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) கிட்டடிப் புள்ளி 0.5m மற்றும் தூரப் புள்ளி 2.0m உடைய நபரொருவர் புத்தகம் வாசிப்பதற்கும் தூரத்தில் உள்ள பொருள் ஒன்றினை அவதானிப்பதற்கும் அந்நபர் அறிய வேண்டிய வில்லையின் வலுவானது முறையே c கிட்டடிப் பார்வையின் ஆகக் குறைந்த தூரம் 25cm எனக் கருதுக

(1) +0.5D-0.5D (2) +1.5D,-1.0D (3) +0.5D,-2.0D
(4) +2.0D,-1.0D (5) +2.0D,-0.5D

8) ஒரே நிலைமையில் உள்ளதும் வளி நிரம்பியதுமான திறந்த மந்த மூடிய குழாய்கள் இரண்டு உள்ளன. மூடிய குழாய் திறந்த குழாயினைப் போன்று இருமடங்கு நீளமானதாகும். திறந்த குழாயினுள் முதலாம் மேற்றொனியிலும், மூடிய குழாயினுள் அடிப்படையிலும் நெட்டாங்கு அலைவடிவம் உள்ளது. குழாயின் முனைவுத் திருத்தத்தினை புறக்கணிக்கலாம்.

திறந்த குழாயினுள் உருவாகும் அலையின் அதிர்வெண் / மூடிய குழாயினுள் உருவாகும் அலையின் அதிர்வெண் ஆகியவற்றின் இடையேயான விகிதம்

(1) 2 (2) 4 (3) 6 (4) 8 (5) 10

9) 0.5Kgதிணிவுள்ள சீரான இழையொன்றின் கீழ் முனையோடு 1.5Kg.திணிவானது தொங்கவிடப்பட்டிருப்பதுடன், மேல் முனையானது 40Nவிசையினால் மேல் நோக்கி இழுக்கப்பட்டுள்ளது. கீழ் மற்றும் மேல் முனைகளில் இழுவிசை முறையே




(1) 10Nமற்றும் 15N ஆகும்
(2) 30N மற்றும் 2 Nஆகும்
(3) 40N மற்றும் 20N ஆகும்
(4) 40N மற்றும் 30N ஆகும்
(5) 40N மற்றும் 40N ஆகும்

10) குவிவுத்தூரம் 15cm உடைய மெல்லிய குவிவுவில்லைக்கு 10cm பின்னால் தளஆடி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. பிரதான அச்சின் மீது வில்லையிலிருந்து 20cm முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருளொன்றின் இறுதி விம்பமானது.




(1) மாயமானதோடு ஆடிக்கு 50cmபின்னால்
(2) மாயமானதோடு வில்லைக்கு 50cmமுன்னால்
(3) மெய்யானதோடு ஆடிக்கு 50cmபின்னால்
(4) மெய்யானதோடு வில்லைக்கு 50cm முன்னால்
(5) மாயமானதோடு ஆடிக்கு 60cm பின்னால்

11) கூட்டு நுணுக்குக்காட்டி மற்றும் தொலைநோக்கியொன்று, குவிவுவில்லை இரண்டு என்றவாறு உபயோகிகத்துக் கொண்டு வழமையான செப்பனிடுதல் நிலைமையில் வைக்கப்பட்டுள்ளன. உபகரணங்கள் இரண்டிற்கும் பொதுவான அம்சமாகவிருப்பது.

(1) பொருளியில் வில்லையாக குவிவுத்தூரம் அதிகமாவுள்ள வில்லையினை உபயோகித்தல்.
(2) வில்லைகள் இரண்டிற்குமிடையேயான இடைவெளி, ஒவ்வொன்றிலும் குவிவுத்தூரத்தின் கூட்டுத்தொகை சமமாகும்.
(3) இடைநடு விம்பமானது தலைகீழ் மெய்யானது.
(4) உபகரணங்கள் இரண்டினதும் இறுதி விம்பமானது கிட்டடிப் பார்வையின் இழிவுத்தூரத்தில் இருத்தல்.
(5) இறுதி விம்பமானது மாய, தலைகீழானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) வழுவான (error) பாதரச வெப்பமானியொன்று வளிமண்டல அமுக்கத்தில்,உருகும் பனிக்கட்டியின் வெப்பநிலை $-0.8^{0}C$ ஆகவும், கொதிக்கும் நீரின் வெப்பநிலை $99.8^{0}C$ ஆகவும் காட்டுகிறது. அந்த வழுவான வெப்பமானியின் வாசிப்பு $30.0^{0}C$என்று காட்டும் போது சரியான வெப்பநிலை எவ்வளவு?

(1) $29.0^{0}C$ (2) $29.5^{0}C$ (3) $30.1^{0}C$ (4) $30.6^{0}C$ (5) $31.1^{0}C$

13) 100W திறன் கொண்டுள்ள வெப்பச்சுருள் மூலம் $30^{0}C$ இலிருக்கும், நன்றாக வெப்பக் காவலிடப்பட்டுள்ள நீரத் திணிவொன்று குறிப்பிட்ட காலத்தில் அதன் வெப்பநிலையை $50^{0}C$வரைக்கும் உயர்த்த முடியும். இதே நீரத்திணிவை $30^{0}C$ இலிருந்து நீரின் கொதிநிலையான $100^{0}C$ வரைக்கும் உயர்த்துவதற்கு தேவையான வெப்பச்சுருளின் திறன்

(1) 100W (2) 150W (3) 200W (4) 350W (5) 500W

14) நிலைக்குத்தாக தொங்கவிடப்பட்டிருக்கும் விற்சுருள் ஒன்றில்m திணிவுடைய பொருளொன்று, எளிய இசையியக்கமொன்றில் ஈடுபடும்போது அதன் அலைவுக் காலாவர்த்தனம் 2s ஆகும். இத்திணிவுடன் மேலதிக 1Kg திணிவானது தொங்கவிடப்படும் போது அலைவுக் காலம் 1s இனால் வேறுபடுகிறது. m இன் பெறுமானமாக இருக்கக்கூடியது.

(1) 0.3Kg (2) 0.8Kg (3) 1Kg (4) 1.3Kg (5) 1.8Kg

15) படத்தில் காட்டப்பட்டிருப்பது சீரான வட்டத் தகட்டிலிருந்து சிறிய வட்டங்கள் இரண்டு வெட்டி அகற்றிய பின் எஞ்சியுள்ள பகுதியாகும். இவ்வெஞ்சிய பகுதியின் புவியீர்ப்பு மையமாக அமையக்கூடியது.




(1) A (2) B (3) C (4) D
(5) E

16) ஒரு பக்க நீளம் a உடைய சமபக்க முக்கோணி ஒன்றின் மூன்றில் m, 2mமற்றும் 3m திணிவுடைய துணிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. இத் தொகுதியின் அழுத்த சக்தியின் பருமனானது




(1) $\frac{3Gm^2}{a}$ (2) $\frac{5Gm^2}{a}$ (3) $\frac{6Gm^2}{a}$
(4) $\frac{9Gm^2}{a}$ (5) $\frac{11Gm^2}{a}$

17) ஒலிச்செறிவு I உடைய மூலமொன்றிலிருந்து 10m மற்றும் 100m தூரத்தில் A மற்றும் B ஆகிய புள்ளிகள் இரண்டுள்ளன.A மற்றும் B புள்ளியில் ஒலிச்செறிவு மட்டங்களிடையேயான வேறுபாடு

(1) 0dB (2) 10dB (3) 20dB (4) 30dB
(5) 100dB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) 


ஒற்றை நிற ஒளி கதிரானது வளியிலிருந்து சமாந்திரமான கிடை முகப்புக்களைக் கொண்ட வளி மற்றும் கண்ணாடி ஆகிய இரு ஊடகங்களூடாக சென்று மீண்டும் நீரிற்குள் வெளியேறுகின்றது. வெளியேறும் கதிரின் சாத்தியமான புள்ளியாக இருப்பதற்கு சரியானது.

(1) a (2) b (3) c
(4) d (5) e

19) படத்திற் காட்டப்பட்டிருக்கும் மின்சுற்றில் செனர் இருவாயின் செனர் வோல்ற்றளவு $v_z = 6v$ ஆகும். சுற்றின் பெயர்ப்பு ஆகவுள்ள ஆடலோட்ட வழங்கல் $v_{in}=10\sin wt$ வடிவத்தில் உள்ளதாயின் பயப்பு வோல்ற்றளவின் $(v_o)$ உச்ச மற்றும் இழிவுப்பெறுமானங்கள் எவையாகும்?




(1) + 4v மற்றும் -10v ஆகும் (2) + 6v மற்றும் -10v ஆகும்
(3) + 4v மற்றும்-4v ஆகும் (4) +6v மற்றும் - 6v ஆகும்
(5) +6v மற்றும் -0v ஆகும்.

20) e அடர்த்தியுடைய மெல்லிய பிளாஸ்டிக்கிலான சிறிய கோணமொன்றுb அடர்த்தியுடைய பிசுக்கற்ற திரவமொன்றில் (6 >e) h ஆழத்திற்கு அமிழ்த்தப்பட்டு விடுவிக்கப்படுகின்றது. அது திரவ மேற்பரப்பை தாண்டி உயர்வடையும் உயரமானது.

(1) $\left(\frac{\sigma}{\rho}-1\right)h$ (2) $\left(\frac{\rho}{\sigma}-1\right)h$ (3) $\left(\frac{\rho}{\sigma}+1\right)h$ (4) $\left(\frac{\sigma}{\rho}+1\right)h$ (5) $\frac{\sigma}{\rho}h$

21) வழமையான செப்பனிடுதல் நிலைமையிலிருக்கும் வாள்நோக்கியானது நீளம் (l) எதிர் உருப்பெருக்கம் (m) இன் வரைபானது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22) நேர்ப்பாதையொன்றில் $15ms^{-1}$ வேகத்தில் பயணிக்கும் மோட்டார் வாகனத்திற்குப் பின்னால் 600Hz அதிர்வெண்ணுள்ள Horn இனை அடித்தவாறு அம்புலன்ஸ் வண்டியொன்று $20\ ms^{-1}$ நேரத்தில் வந்தடைகின்றது. ஓய்வு நிலையில் வளியில் ஒலியின் வேகம் $340ms^{-1}$ என்றால் மோட்டார் வண்டியின் சாரதிக்கு கேட்கும் அதிர்வெண்ணானது




(1) $\left(\frac{340+15}{340-20}\right) \times 600\,Hz$ (2) $\left(\frac{340-15}{340+20}\right) \times 600\,Hz$ (3) $\left(\frac{340+20}{340+15}\right) \times 600\,Hz$

(4) $\left(\frac{340+15}{340+20}\right) \times 600\,Hz$ (5) $\left(\frac{340-15}{340-20}\right) \times 600\,Hz$

23) ஆரை r உடையதும் ஏற்றமுள்ளதுமான எண்ணெய் துளி ஒன்றின் அழுத்தம் $V_0$ ஆகும். இவ்வாறான சர்வசம எண்ணெய் துளிகள் 1000 ஒன்று சேர்ந்து ஒற்றை எண்ணெய் துளியொன்றை உருவாக்குமானால், அதன் அழுத்தமானது

(1) $v_0$ (2) $10v_0$ (3) $100v_0$ (4) $105v_0$ (5) $1000v_0$

24) $27^0c$ மற்றும் $52^0c$ இல் நீரின் நிரம்பலாவியமுக்கம் முறையே 30mm Hg மற்றும் 100mm Hg ஆகும். மூடிய பாத்திரமொன்றில் $27^0c$ இல் நீர்த்துளி மற்றும் நீராவியினால் நிரம்பலடைந்துள்ள வளி ஆகியன அடங்கியிருக்கும் பொழுது மொத்த அமுக்கம் 750mm Hg ஆகும். பாத்திரத்திலுள்ள நீரானது $52^0c$ இல் வளியினை மட்டுமட்டாக நிரம்பலடையச் செய்வதற்கு மட்டும் போதுமான தென்றால் $52^0c$ மற்றும் $117^0c$ ல் பாத்திரத்தினுள் அமுக்கம் mm Hg ல் முறையே

(1) 750 மற்றும் 900 (2) 900 மற்றும் 1080 (3) 600 மற்றும் 1992

(4) 780 மற்றும் 936 (5) 880 மற்றும் 1056

25) ஆரைகள் முறையே a மற்றும் b உடைய (a< b) சவர்க்கார குமிழ்கள் இரண்டு படத்திற் காட்டியவாறு ஒன்றோடொன்று இணைந்து சோடியொன்றினை உருவாக்கும்போது இடை முகப்பின் ஆரையாக இருப்பது

(1) $\left(\frac{ab}{b-a}\right)$ (2) $\left(\frac{b-a}{ab}\right)$ (3) $\left(\frac{ab}{a+b}\right)$ (4) $\left(\frac{a+b}{2}\right)$ (5) $\left(\frac{b-a}{2}\right)$




26) புவிமேற்பரப்பில் புவியீர்ப்பின் புலச்செறிவு 9 என்றால், புவியின் போன்று1/8 மடங்கு திணிவினையும் மற்றும் புவியின் ஆரையினைப் போன்று1/2 மடங்கு ஆரையுடைய வேற்று கிரகமொன்றின் மீது புவியீர்ப்பு புலச்செறிவானது

(1) 9/16 (2) 9/8 (3) 9/4 (4) 9/2 (5) 2g


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27) வெப்பநிலை $100^0c$ ஆகவுள்ள போது ஒருவகை கடத்தியில் அதன் கம்பியின் தடை $10\Omega$ ஆகும். இந்த கடத்தியானது உருவாக்கப்பட்டுள்ள பதார்த்தத்தின் தடையின் வெப்பக்குணம் $2x10^{-30}c^{-1}$என்றால் இந்த கடத்தியின் வெப்பநிலையானது $200^0c$ ஆகும் போது தடையானது

(1) $11.0\,\Omega$ (2) $11.7\,\Omega$ (3) $12.0\,\Omega$ (4) $12.7\Omega$ (5) $20.0\Omega$

28) ஆரம்ப வெப்பநிலை $30^0c$ சாரீரப்பதன் 85%மும் மாகவுள்ள மூடிய அறையொன்று சீரான வேகத்தில் குளிர்வடைகின்றது. அறையினுள் வளியின் சாரீரப்பதன் மற்றும் தனி ஈரப்பதன் ஆகியவற்றின் வேறுபாட்டினை நன்றாக விபரிப்பது கீழ்குறிப்பிடப்பட்டுள்ள எச்சோடிக் கூற்றாகும்?

| சாரீரப்பதன் | தனிஈரப்பதன் |
|---|---|
| முதலில் அதிகரித்து பின்னர் மாறிலியாகும் | முதலில்குறைவடைந்து பின்னர் மாறிலியாகும் |
| முதலில் குறைவடைந்து பின்னர் மாறிலியாகும் | தொடர்ந்தும் குறைவடையும் |
| முதலில் அதிகரித்து பின்னர் மாறிலியாகும் | முதலில் மாறிலியாகும். பின்னர் படிப்படையாக குறைவடையும். |
| முதலில் அதிகரித்து பின்னர் மாறிலியாகவிருக்கும் | தொடர்ந்தும் அதிகரிக்கும் |
| தொடர்ந்தும் அதிகரிக்கும் | முதலில் அதிகரித்து பின்னர் குறைவடையும் |

29) மேலே காட்டப்பட்டுள்ள சுற்றில் 12 $\Omega$தடையின் மூலம் வலு இழப்புமேற்கொள்ளப்படாவிட்டால் R இன் மூலம் நடைபெறும் வலு இழப்புஆவது.




(1) 0 (2) 2.5w (3) 5.0w
(4) 10w (5) 90w

30) abca என்பது ஒரு சுழற்சி செயற்பாடாகும். இங்கு a இலிருந்து b வரைக்கும் செல்லும் போது 120 KJ வெப்பமானது உறிஞ்சப்படுவதுடன் b இலிருந்து c வரைக்கும் செல்லும் போது 70 KJ வெப்பத்தினையும் வெளியேற்றும். c இலிருந்து a வரைக்கும் உள்ளது உறுதி வெப்ப செயற்பாடு என்றால் இதனை நிறைவேற்றுவதற்கு தொகுதியினால் செய்யப்படவேண்டிய வேலை




(1) 40KJ (2) 30KJ (3) -30KJ
(4) -40KJ (5)-50KJ

31) மின்னியக்க விசை E மற்றும் அகத்தடை r உடைய மின்கலமானது வெவ்வேறாக $R_1$ மற்றும் $R_2$ தடைகள் இரண்டுடன் இணைக்கப்படும் போது அவற்றிலிருந்து வெப்ப இழப்பு வீதமானது ஒரே சமனாக இருந்தால்மின்கலத்தின் அகத்தடையானது

(1) $(R_1 + R_2)$ (2) $\frac{(R_1 + R_2)}{2}$ (3) $\frac{(R_1 - R_2)}{2}$ (4) $\frac{1}{2}\sqrt{R_1 R_2}$ (5) $\sqrt{R_1 R_2}$


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32) A மற்றும் B ஆகியன அருகருகே சமாந்தரமாக வைக்கப்பட்டுள்ள மின் கடத்தும் தகடுகள் இரண்டிற்கு ஏற்றங்கள் வழங்கப்படும் போது ஏற்றம் பெற்ற மேற்பரப்பில்ஏற்ற அடர்த்தி +6மற்றும் -6 என்றால் படத்திற் காட்டப்பட்டுள்ளவாறு X, Y மற்றும் Z பள்ளிகளில் மின்புலச் செறிவின் பருமனாக இருக்கக்கூடியது E என்பது ஊடகத்தின் மின்னுழைத்தன்மையாகும்)




(1) $0, \frac{\sigma}{2\varepsilon_0}, \frac{\sigma}{2\varepsilon_0}$ (2) $0, \frac{\sigma}{2\varepsilon_0}, 0$

(3) $0, \frac{\sigma}{\varepsilon_0}, 0$ (4) $\frac{\sigma}{\varepsilon_0}, \frac{\sigma}{\varepsilon_0}, \frac{\sigma}{\varepsilon_0}$

(5) $\frac{\sigma}{2\varepsilon_0}, \frac{\sigma}{\varepsilon_0}, \frac{\sigma}{2\varepsilon_0}$

33) பாரிய பரப்பளவுடனான சிலிண்டர் வடிவப் பாத்திரமொன்றினுள் திரவமொன்று நிரப்பப்பட்டுள்ளது. மேல் திரவமேற்பரப்பிலிருந்து 4cmமற்றும் 6cm ஆழத்தில் பாத்திரத்தின் நிலைக்குத்துச் சுவரின்இரு துவாரங்கள் வழியே வெளியேறும் திரவமானது நிலத்தில் ஒரே இடத்தை வந்தடையுமாயின் பாத்திரத்தில் உள்ள திரவத்தின் ஆழமானது




(1) 10cm (2) 8cm (3) 9.8cm
(4) 980cm (5) 16cm

34) $1.2 kgm^{-3}$அடர்த்தி கொண்ட பிசுக்குமையற்ற நெருக்கமடையாத வாயுவொன்று குழாயின் வளியே v வேகத்தில் பாய்கின்றது. A மற்றும் B ஆகிய அமுக்கமானிகள் இரண்டு படத்திற் காட்டியுள்ளவாறு குழாயுடன் இணைக்கப்பட்டுள்ளன. A மற்றும் B ஆகிய அமுக்கமானிகளில் திரவ நிரலின் உயரவேறுபாடு முறையே 64 mm மற்றும் 34mm ஆகும். அமுக்கமானி திரவத்தின் அடர்த்தி 800 $kgm^{-3}$ ஆனால் வாயுவானது பாயும் வேகம்(v) ஆனது




(1) 60 $m s^{-1}$ (2) 40 $m s^{-1}$ (3) 20 $m s^{-1}$
(4) 10 $m s^{-1}$ (5) $\sqrt{20}$ $m s^{-1}$

35) வேலைச் சார்பு W உடைய உலோகத்திலிருந்து ஒளி இலத்திரன்களை விடுவிக்கக்கூடிய ஒளியின் ஆகக்குறைந்த அலை நீளமானது (ஒளியின் வேகம் c மற்றும் பிளாங்கின் மாறிலி h ஆகும்).

(1) $\frac{hc}{W}$ (2) $\frac{W}{hc}$ (3) $\frac{hW}{c}$ (4) $\frac{cW}{h}$ (5) $\frac{c}{hW}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36) தரப்பட்டுள்ள விரியலாக்கி சுற்றில் $V_{in}$ மற்றும் $v_o$ பெய்ப்பு மற்றும் பயப்பு ஆகும். $v_o$ இன் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றினைத் கருதுக.




A) $V_{in}$ <o ஆயின் $v_o$>o ஆகும்.

B) $V_O$ இன் பெறுமானது $R_3$ இன் பெறுமானத்தில் தங்கியிருப்பதில்லை

c) $V_o$ இன் பெறுமானம் அதிஉயர்வாக இருப்பது $R_3=R_1+R_2$ ஆக உள்ள போதாகும் இதில் சரியானது

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும் (4) A மற்றும் B மட்டும்
(5) A,B,C யாவும்

37) படத்திற் காட்டப்பட்டுள்ள சுற்றில் $C_1=1\mu F=C_2=3\ \mu F$ ஆகும். இருகிளைச் சாவியானது முதலில் A முனையுடன் தொடர்பு படுத்தி $C_1$ கொள்ளலவியானது முழுவதுமாக ஏற்றம் செய்த பின்னர் B முனையுடன் தொடர்பு படுத்தப்படுகிறது. தொகுதியானது சமநிலை எய்திய பின் முறையே $C_1$ $C_2$ மற்றும் $3\Omega$ தடையினூடாக அழுத்த வேறுபாடனது




(1) 0,1.5v,1.5v (2) 0,0,1.5v (3) 1.5v,1.5v,0 (4) 15v,1.5v,1.5
(5) 0,0,0Ω

38) முறையே $1\Omega$, $2\Omega$ மற்றும் $2\Omega$ தடையுடைய X, Y மற்றும் Z ஆகிய மின்குமிழ்கள் மூன்று படத்திற் காட்டப்பட்டுள்ளவாறு மின்கலமொன்றுடன் இணைக்கப்பட்டள்ளன. மின்குமிழினால் நிகழ்த்தப்படும் வலு இழப்பு இன் விகிதம்




(1) 1:2:2 (2) 2:1:1 (3) 4:2:1 (4) 9:4:2
(5) 2:4:9

39) இந்த படலைச் சுற்றில் காட்டப்பட்டிருப்பது எந்த படலைச் செயற்பாடாகும்




(1) AND (2) NAND (3) OR
(4) NOR (5) EX-OR

40) சர்வசமனான A, B, C பந்துகள் மூன்று படத்திற் காட்டப்பட்டுள்ளவாறு வைக்கப்பட்டவாறு விடுவிக்கப்படுகின்றது. எல்லா மேற்பரப்புகளும் ஒப்பமானதென்றால் பந்து A இன் ஆரம்ப ஆர்முடுகல்




(1) $\frac{g}{2}$ (2) $\frac{g}{3}$ (3) $g$
(4) $\frac{g}{5}$ (5) $\frac{g}{7}$


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41) 100mw வலுவுடைய மின்சக்கியானது, மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து 20,000v அழுத்த வேறுபாட்டின் கீழ் மின்னினை விநியோகிக்கும் போது வலு இழப்பு $p_1$ஆகும் மேற்குறிப்பிட்ட மின்வலு 200V அழுத்த வேறுபாட்டின் கீழ் விநியோகிக்கப்படும் போது வலு இழப்பு $P_2$ ஆகவுமிருந்தால் $\frac{P_2}{P_1}$ ஆக விருக்கக்கூடியது

(1) $10^5$ (2) $10^4$ (3) $10^3$ (4) $10^2$ (5) 10

42) 


படத்திற் காட்டப்பட்டுள்ளவாறு சுற்றில் மின்கலத்திற்கு அகத்தடையில்லை. A இலிருந்து B வரைக்குமிடையேயான அழுத்தவேறுபாடு

(1) 2v (2) 3v (3) 4v
(4) -2v (5) -3v

43) படத்திற் காட்டப்பட்டுள்ள அழுத்தமானி கம்பியின் நீளம் 400cm ஆவதோடு அதன் தடை 20Ω ஆகும். அக் கம்பி உடன் தொடரில் மி.இ.வி. 2.0v உடைய மின்கலமொன்றும் மற்றும் 3980Ω தடையும் இணைக்கப்பட்டுள்ளது. இது வெப்ப மின்இளை ஒன்றின் மி.இ.விசையினைக் காண்பதற்கு அதன் முனைகளுடன் இணைக்கப்பட்டு சமநிலைப்படுத்தப்பட்ட போது சமநிலை நீளம் 168cmஆகவிருந்தது. இவ்வெப்பநிலையில் வெப்பஇணையின் மின் இயக்க விசையானது




(1) 16.8mv (2) 8.4mv (3) 4.2mv
(4) 3.6mv (5) 2.1mv

44) காந்த பாய அடர்த்தி B உடைய காந்த புலத்திற்குள் செங்குத்தாக v.வேகத்தில் உள்ளே நுழையும் புரோட்டோன் (: H)ஒன்று ஆரை r உடைய வட்டவடிவப் பாதையில் அசைகின்றது. இக் காந்த புலத்திற்குள் செங்குத்தாக 2v வேகத்தில் உள்ளே நுழையும் அல்பா துணிக்கையின் ($4_2$He) பாதையின் ஆரையானது

(1) r/2 (2) r (3) 2r (4) 4r (5) 8r

45) ஒவ்வொன்றும் 2M நீளமுடைய ஒரே சமனான மின்கடத்தும் கம்பிகள் 4P,Q,R,S இன் படி படத்திற் காட்டப்பட்டுள்ளவாறு வளைக்கப்பட்டு சீரான காந்தபுலமொன்றில் தொங்கவிடப்பட்டுள்ளது.

PP - சற்சதுரம் Q- செவ்வகம் R - சமபக்கமுக்கோணி S - வட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே சமனான மின்னோட்டம் இக் கம்பிச் சட்டங்களினூடாக பிரயோகிக்கப்படுவது அதிகூடிய முறுக்கன்

(1) P மீது (2) Q மீது (3) R மீது (4) S மீது
(5) எல்லா சட்டங்களிலும் முறுக்கம் சமமாகும்

46) $^{222}_{86}X$ என்ற கதிர்தொழிற்பாட்டு கருவொன்று தன்னிச்சையாக மேற்பரப்பாக்கலுக்கு உட்பட்டு துணிக்கையினை காலுவது முலம் $^{217}_{81}Y$ என்ற கருவாக தேய்வடைகிறது. இங்கு வெளிவிடப்படும துணிக்கைகளின் வகைகள்?

| | அல்பா துணிக்கை | புரோட்டன் | பீற்றா துணிக்கை |
|---|---|---|---|
| (1) | 1 | 2 | 3 |
| (2) | 1 | 3 | 2 |
| (3) | 1 | 1 | 2 |
| (4) | 1 | 2 | 0 |
| (5) | 1 | 2 | 1 |

47) படத்திற் காட்டப்பட்டுள்ளவாறு 2r நீளமான மின்கடத்தும் கோளொன்று 0 புள்ளி பற்றி B காந்த புலத்திற்கு வெங்குத்தாக மாற wகோண வேகத்தில் சுழல்கிறது. கோளின் முனைகள் மற்றும் நடுப்புள்ளி ஆகியன எப்போதும் ஆரை 2r மற்றும் r உடைய வட்ட வடிவமான மின்கடத்தும் வலையங்கள் இரண்டினை தொட்டவாறு உள்ளன. X மற்றும் Y இடையேயான அழுத்தவேறுபாடு 10V என்றால் y மற்றும்z இடையேயான அழுத்தவேறுபாடு ஆக இருக்ககூடியது




(1) 5V (2) 10v (3) 20v
(4) 30v (5) 40v

48) அளவிடமுடியாத திணிவினைக் கொண்ட குறுக்கு வெட்டு முகப்பரப்பளவு $10^{-6}m^2$ மற்றும் 1.00m நீளமுடைய செப்புக்கம்பியொன்று அதன் ஒரு முனையானது உறுதியாக இணைக்கப்பட்டவாறு ஒப்பமான மேசை மீது படத்திற் காட்டியவாறு வைக்கப்பட்டுள்ளது. கம்பியின சுயாதீன முனையுடன் 1.00kg குண்டொன்று இணைக்கப்பட்டுள்ளது. கம்பி மற்றும் குண்டானது 20 rads$^{-1}$ கோண வேகத்தில் சுழல்கிறது. கம்பியின் நீட்சி $10^{-3}$ என்றால் கம்பியின் யங்கின் மட்டு




(1) $4x10^{11}Nm^{-2}$ (2) $6x10^{11}Nm^{-2}$ (3) $8x10^{11}Nm^{-2}$
(4) $10x10^{11}Nm^{-2}$ (5) $2x10^{11}Nm^{-2}$


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49) படத்திற் காட்டப்பட்டிருப்பது வெவ்வேறான இரு வெப்பநிலையில் கரும்பொருள் ஒன்றிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சுக்களின் அலை நீளம் எதிர் செறிவின் வேறுபாட்டைக் காட்டும் வரைபாகும். இவ் வரைபு தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றினைக் கருதுக




A) $T_1$ வெப்பநிலை $T_2$ இதைவிட அதிகமானதாகும்
B) $\lambda T_1 = \lambda T_2$ ஆகும்.
C) $\lambda_1$ மற்றும் $\lambda_2$ அலை நீளங்களிடையே அதிக சக்தியானது வெளிவருவது 2ம் கதிர் வீச்சிலாகும்.

மேற்குறிப்பிட்ட கூற்றுகளிலே வெளிவருவது சரியானது.

(1) C மட்டும் (2) A மட்டும் (3) B மட்டும்
(4) B மற்றும் C மட்டும் (5) ABC யாவும்

50) கரடுமுரடான சாய்தளமொன்றின் மீது மரக்குற்றி ஒன்று எல்லைச் சமநிலையில் உள்ளது. படத்திற் காட்டியுள்ளபடி இனி குற்றியின் மீது தளத்திற்கு சமாந்திரமாக மேல் நோக்கியவாறு.P என்னும் விசையானது பிரயோகிக்கப்படுகின்றது. P விசையானது பூச்சியத்திலிருந்து முறையே படிப்படியாக அதிகரிக்கும் போது அதிகரிக்கும் போது மரக்குற்றியின் மீது செயற்படும் உராய்வு விசை F இன் வேறுபாட்டை கீழ்குறிப்பிட்ட வரைபு சரியாகக் குறிப்பிடுகின்றது.








## உங்களிற்காக.....

பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் மற்றும் கணிதப்பிரிவுகளில் ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் வினாக்களின் தெளிவின்மைகளை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

எதிர்வரும் இதழில் உங்களுக்காக ஒரு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிக்கலான வினாக்கள் இருப்பின் கீழ்காணும் முகவரிகளுக்கு அனுப்பி வையுங்கள். மிக விரைவில் உங்கள் சந்தேகங்களுக்கான தீர்வுகளும் அதற்கான விளக்கங்களையும் SCIENCE TODAY மாதாந்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். இந்த உங்களிற்காக பாகம் உங்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என நாம் நம்புகின்றோம்.

**Address**
44, 1/1, Vandewert Place, Dehiwela
**e-mail**
sciencetodaymagazine@gmail.com
**Tel**
0771 871 078



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Prof. Nazera Salim**
Head,
Department of Botany,
University of Sri Jeyawarthanapura

# 2014ம் ஆண்டு உயிரியல் வினாத்தாள் பற்றிய விளக்கம்

எல்லா வினாக்களுக்கும் வழமை போன்றே சாதாரண விடயம் தொடர்பான புரிதலுடன் அடிப்படையான விளக்கமும் கொண்டுள்ள மாணவர்களுக்கு அவர்களது ஞாபகத்திற்கு ஏற்ப விடைகளை தேர்ந்தெடுப்பதற்கு இயலுமானவையாக உள்ளன. ஆயினும், தமது ஞாபகசக்தி, திறமைகளுக்கு ஏற்ப விடைகளை தேர்ந்தெடுப்பதில் நேரத்தை முகாமைத்துவம் செய்வதற்கான அறிவாற்றலை இவர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

பல்தேர்வு வினாக்களை பொறுத்தவரையில் முதலில், சிறு சிறு வினாக்களுக்கும் அவற்றிற்கான சிறு சிறு விடைகளுடனான (ஒரு, இரு சொற்களிலான) வினாக்களுக்கு அதாவது, 1, 2, 3, 4, 6, 7, 8, 19, 28, 22, 27, 29, 32, 37, 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடைதரும்போது, வினாக்களும் விடைகளும் மிகவும் சிறியவையாகவிருப்பதனால், வினாக்களை விடைகளுடன் சேர்த்து வாசித்து விளங்கிக் கொள்ள ஒரு நிமிடத்திலும் குறைவான நேரமே தேவைப்படும். இதனால் தரப்பட்டுள்ள 16 வினாக்களுக்கும் 15 நிமிடங்கள் போதுமானதாகும்.

மீதமான 24 வினாக்களையும் (இறுதியான 10 வினாக்கள் தவிர) படித்து விளங்கிக்கொள்வதற்கு நீண்டளவு நேரம் அவசியமாகும். எவ்வாறாயினும், விடயத்தைப்பற்றிய அறிவைப் பெற்றுள்ள மாணவர்கள் தமக்குள்ள ஞாபகத்தைப் பொறுத்து அவற்றிற்கான பதில்களை இலகுவில் கண்டுபிடித்து விடமுடியும் என்பதுடன் அதற்கென ஒரு மணித்தியாலம் வரையான நேரத்தை செலவிடமுடியும். இது நன்கு போதுமான அளவு நேரமாகும்.

41-50 வரையான வினாக்களுக்கு விடைகளை தேடுவதற்கு மீதமாகவுள்ள 45 நிமிடங்களை பயன்படுத்த முடியும். இவ் வினாக்கள் பத்திற்குமான பதில்களுள் ஒன்றோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவையோ சரியானவையாக இருக்க முடியுமென்பதால் அந்தச் சரியான பதிலை கவனத்துடன் தெரிந்தெடுப்பதற்கு சிறிது நேரம் தேவைப்படும். அவ்வாறிருப்பினும், மீண்டும் மிகச்சிறிய வினாக்களும் சிறிய விடைகளும் (ஒரு, அல்லது இரு சொற்கள்) கொண்ட 41, 43, 47, 49, 50 ஆகிய வினாக்கள் தொடர்பில் ஆரம்பத்திலேயே விடைகளை தேடிக்கண்டு நேரத்தை மீதப்படுத்த முடியும். இதற்கென 15 நிமிடங்களையும எஞ்சியுள்ள 5 வினாக்களுக்கும் 30 நிமிடங்களையும் செலவிடுவதனால் இவை 10 வினாக்களுக்கும் விடைகளை கண்டுகொள்ள முடியும். ஆய்வுத்திறனை பரீட்சிப்பதற்கென தரப்பட்டுள்ள ஒரேயொரு வினா 30வது வினாவாக இருக்கும் அதேவேளை இது தொடர்பிலும் மரபியல் பற்றிய அறிவும் விளக்கமும் உள்ள மாணவர்கள் மிகச்சுலபமாக இதற்கான விடையை கண்டுகொள்வர். தர்க்கரீதியாகவன்றி நேரடியாக பாடத்திட்டத்திலிருந்தே பதிலை பெறத்தக்க வினாவாதலின், விடயம் பற்றிய அறிவும் விளக்கமும், ஞாபகமும் உள்ள திறமைமிக்க மாணவரினால் மிகவும் வெற்றிகரமாக உயிரியல் - பாகம் 1 இற்கான வினாக்களுக்கு விடைகளை அளிக்க முடியும் என்பதே எனது கருத்தாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைப்புகட்டுரைவினாக்களை பெறுத்தவரையில்

### 04 வரையான வினாக்கள்

இவ்வினாக்கள் தொடர்பில் அடிப்படையான அறிவும் விடய அறிவாற்றலுடன் ஞாபகசக்தியும் இருப்பின் நேரடியான விடைகளை தரமுடியும். எவ்வாறாயினும், அர்த்தத்தை வெளிப்படுத்தல் சம்பந்தமான விளக்கத்தை சரிநுட்பமான முறையில் வெளிப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம். வினா இலக்கம் 01 (B) (I), மற்றும் (IV), 02 A (I) a, (II)a, (III) b, (IV)a, B (I) , 03 A (I) , B (IV) , 04 B (I) ஆகியவை தொடர்பில் அறிவாற்றலை வளர்த்துக்கொள்ளுதல் அவசியம். மேலும், கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளை தேவைக்கு அதிகமாக எழுதும் போது, தவறான விடைகள் காணப்படுமிடத்து பெறக்கூடிய புள்ளிகள் குறைவடைந்துவிடும் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். இல 01 (A) III, VII (C) I, III, 02 (B) (IV), 03 (A) (IV), ஆகிய வினாக்களை பொறுத்தவரையில் கேட்கவரும் விடைகளின் அளவிற்கு அதிகமாக பதில்களை தருவதற்கு மாணவர்கள் முயற்சிப்பதற்கு ஊக்கமளிப்பவையாக உள்ளன.

## கட்டுரை வினாக்களை பெறுத்த வரையில்

05, 06, 08 ஆம் இலக்க வினாக்களை விளக்குவதற்கென சரியான வரைபடங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது முக்கியமாகும். உதாரணமாக, ஒளிவட்டம் போன்றவற்றிற்கு கோண அமைவுகளை காண்பிப்பது புள்ளிகளை பெறுவதற்கு இடையூறாகும். மேலும் அத்தகைய வரைபடம் முடிக்கப்படாமல் / லேபல் இடப்பட்டும் சில மாணவர்களால் விடப்படுகிறது. இது சாதாரணமாக நடைபெறுவதாகும்.

07வது வினா மிகவும் இலகுவாக புள்ளிகளை பெறக்கூடியதாகும். (8) 6 வினாவிற்கு விடையளிப்பது விடயம் தொடர்பில் அதிகளவு விளக்கத்தை பெறவேண்டிய ஒன்றாகும். (9) 6 வினாவிற்கு அர்த்தம் காண்பிக்கும் போது குறியீடுகள் எல்லாவற்றையும் பயன்படுத்துதல் அவசியமானதென்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

6 வது வினாவிற்கு பதில் தரும் போது சொற்களை உரியமுறையில் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையில் அறிவாற்றலை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும். 'உருவாக்குதல்' 'அதிகரித்தல்' 'தவிர்த்தல்' 'செய்வித்தல்' போன்ற சொற்களை மாணவர்கள் பலர் பயன்படுத்து தவறாகும். இது புள்ளிகளை வளங்குவதில் மிகவும் பிரதிகூல நிலையை உருவாக்குகிறது. இதிலிருந்து 2014 ஆம் ஆண்டு உயிரியல் வினாதாள் எத்தகையது என புரிந்ருக்கும் என்றே எண்ணுகின்றேன் ஆகவே இதே வழிமுறையில் எதிர்கால வினாத்தாள்களிலும் முகம் கொடுத்து வெற்றி பெற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்

SCIENCE TODAY யின் Page

SCIENCE TODAY யின் தொடர்ச்சியான தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள SCIENCE TODAY யின் Facebook பக்கத்துடன் இணைந்திருங்கள்......
http://www.facebook.com/sciencetodaymagazine



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**Dr. Hiran Amerasegara**
Department of forestry &
Environmental science,
University of Sri Jeyawarthanapura

# உயர்தர பரீட்சை உயிரியல் வினாத்தாளிற்கு வெற்றிகரமாக விடையளிப்பதற்கு இந்த விடயங்களை மனதிற் பதித்துக் கொள்ளவும்

க.பொ.த உயர்தர பரீட்ச்சைக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. சாதாரண தரத்தில் சித்தியெய்தி உயிரியல் பிரிவில் உயர்தரத்தில் 2 வருடங்களுக்கு மேலமாக கற்று வந்துள்ளீர்கள் நீங்கள் தற்போது எதிர்பாத்து இருப்பது இம்முறை உயர்தரப்பரீட்சசையில் உயர் சித்தியெய்தி ஒரு வைத்தியராகவோ அல்லது ஒரு விஞ்ஞானியாகவோ வருவதற்காகும்.

இக்காலப்பகுதியில் மாணவர்கள் கற்றவற்றை சரியானவாறு கிரகித்து கொண்டு அவற்றை முறையான வகையில பரீட்சையில் முன்வைத்தீர்கள் என்றால், அதி உயர் சித்தியினை எய்தக் கூடியதாக இருக்கும். உயிரியல் வினாத்தாளிற்கு விடையளிப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர், மாணவியரை கருத்திற் கொண்டு இம்முறை பரீட்ச்சைக்கு தயாராவது எவ்வாறு என்று வழிகாட்டுவதற்கு நாம் இங்கே தயாராக உள்ளோம்.

முதலில் பரீட்ச்சைக்கு தயாராவதற்கு பரிசீலனை செய்ய வேண்டிய பாடக்குறிப்புக்கள், நூல்கள் பற்றி ஆராய்வோம். பரீட்சை வினாத்தாளிற்கு புள்ளிகள் வழங்கப்படுவது புள்ளி வழங்கும் முறைமைக்கு ஏற்றவாறு என்றபடியினால், விடயங்கள் சரிவரக் கற்றுக் கொண்டு அதன்படி பரீட்ச்சைக்கு விடையளிப்பது மிகவும் முக்கியமானதாகவும். எனவே வேறு நூல்களை விட ஆசிரியர் கைநூலினை உபயோகிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

கடந்தகால பரீட்சைகளின் போது பரீடசாத்திகள் எதிர்பார்த்திராத, ஆசிரியர் கைநூலில் இடம் பெற்றிருந்த சிற்சிறு விடயங்களுக்கு கூட புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன. உதாரணத்திற்கு சிறுநீரகத்தில் நீரானது உயிர்ப்பாக அகத்துறிஞ்சப்படுகின்றது. என்பதற்கு புள்ளி வழங்கப்பட்டதோடு, சில பரீட்சார்த்திகள் (Tuatara/Bipalium) போன்ற விலங்குகள் பற்றி அறிந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலில் உயிரியல் வினாப்பத்திரம் பற்றி சுருக்கமாக ஆராய்வோம்

உயிரியல் வினாப்பத்திரத்தினை எடுத்துக்கொண்டால் அது 2 வினாத்தாள்களைக் கொண்டதாகும் 1ம் வினாத்தாள் பல்தேர்வு வினாத்தாளாகும் அதில் பல்தேர்வு வினாக்கள் 50 உள்ளன இதற்கு 100 புள்ளிகள் இரண்டாம் வினாத்தாளில் கட்டமைப்பு மற்றும் கட்டுரை வினாக்கள் அடங்கியுள்ளன. இவற்றிற்கும் 100 புள்ளிகள் வழங்கப்படுகின்றன. இங்கு கட்டாயமாக கட்டமைப்பு வினா நான்கிற்கும், கட்டுரை வினாக்கள் 6ல் 4இனையும் தேர்வு செய்து விடையளிப்பதற்கு சந்தர்ப்பம் தரப்பட்டுள்ளது எனவே 2ம் வினாத்தாளிற்கு விடையளிப்பதற்கு வழங்கப்படும் மொத்த 3 மணித்தியாளங்களில் ஒரு மணித்தியாளத்தினை கட்டமைப்பு வினாக்கள் 4ற்கும் எஞ்சிய இரண்டு மணித்தியாளத்தினை கட்டுரை வினாக்களுக்கும் விடையளிப்பதற்கு ஏற்றவாறு நேரத்தினை ஒதுக்கி கொள்ள வேண்டும்.

அடுத்ததாக பல்தேர்வு வினாப்பத்திரம் பற்றி ஆராய்வோம். உண்மையில் உயர்பெறுபேற்றினை எதிர்பாத்திருக்கும் பரீட்சார்த்தி ஒருவர் பல்தேர்வு வினாப் பத்திரத்திரத்தினை போன்று கட்டுரை வினாத்தாளுக்கும் கூடிய அவதானம் செலுத்த வேண்டியிருக்கும். பல்தேர்வு வினாப்பத்திருக்கு 100 புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

இங்கு கட்டாயமாக கட்டமைப்பு வினா வினா 4 கிற்கும் கட்டுரை வினாக்கள் 6ல் 4கினையும் தேர்வு செய்து விடையளிப்பதற்கு சந்தர்ப்பம் தரப்பட்டுள்ளது. எனவே இரண்டாம் வினாத்தாளிற்கு விடையளிப்பதற்கு வழங்கப்படும் மொத்த 3 மணித்தியாளங்களின் ஒரு மணித்தியாளத்தினை கட்டமைப்பு வினாக்கள் 4ற்கும் எஞ்சிய இரண்டு மணித்தியாலத்தினை கட்டுரை வினாக்களுக்கும் விடையளிப்பதற்கு ஏற்றவாறு நேரத்தினை ஒதுக்கி கொள்ளவேண்டும்.

அடுத்ததாக பல்தேர்வு வினாப்பத்திரம் பற்றி ஆராய்வோம் உண்மையில் உயர் பெறுபேற்றினை எதிர்பார்த்திருக்கும் பரீட்சார்த்தி ஒருவர் பல்தேர்வு வினாப்பத்திரத்தினை போன்று கட்டுரை வினாத்தாளுக்குகம் கூடிய அவதானம் செலுத்த வேண்டியிருக்கும். பல்தேர்வு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகளும் கட்டுரை வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகளும் வழங்கப்படுவதால் சித்தியினை எதிர் பார்த்திருக்கும் பரீட்சார்த்திகள் யாவரும் பல்தேர்வு வினாக்கள் 40ற்கு சரியாக விடையளிக்க வேண்டும் மேலும் பாடத்திட்டத்தில் எல்லா அலகுகளையும் நன்றாக கற்றிருப்பது மிகவும் அத்தியாவசியமாகும்.

அடுத்ததாக இரண்டாம் வினாத்தாளிற்கு தயாராகும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவையென பார்ப்போம் கட்டுரை வினாத்தாளை கருதினோமானால் அதற்கு 3 மணி நேரம் செலவிடுவது என்பது சரியாக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களுக்கிடையில் கிரிகட் மட்சினைப் போன்றதாகும் குறிப்பிட்ட நேரத்திற்குள் மட்டற்ற எண்ணிக்கையிலான விடயங்களை அங்கு எழுத வேண்டி இருக்கும் சில மாணவர்களிடம் சில மூட நம்பிக்கைகள் இங்கு இருப்பதை நான் இத்தருணத்தில் குறிப்பிட விருமம்புகிறேன். வரைபடங்களுக்கு நிறமூட்டுவது, பிழைகள் ஏற்பட்டால் அவற்றை அழிப்பதற்கு (tipex) உபயோகிக்க வேண்டும். போன்ற சிலவாகும். எனினும் கட்டமைப்பு வினாக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடையளிக்கும் போது முற்குறிப்பிட்டவற்றை செய்து கொண்டிருப்பதற்கு நேரம்இருக்காது. வினா நேரத்தினை வீணடிப்பதே அங்கு நடைபெறுகின்றது. எதாவது பிழைத்து விட்டால் தனி நோட்டில் அதனை வெட்டி விடுக. அத்தோடு அழகான உருண்டை வடிவமான எழுத்துக்களால் எழுதிக் கொண்டிருப்பதற்கு நேரம் இருக்காது. குறிப்பிட்ட நேர இடைவெளிக்குள் நிறைய எண்ணிக்கையிலான விடயங்களை எழுத வேண்டும் என்பதனை நினைவுறுத்திக் கொள்ளுங்கள்.

இரண்டு வருடங்களாக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டதிலிருந்து வைத்திய பீடத்திற்கு அனுமதி கிடைப்பதற்கு எதிர்பார்த்திருந்தால், இதனை நன்றாக மனதில் நிலை நிறுத்திக் கொள்ளுங்கள். பேனையில் (நன்றாக எழுதக்கூடிய) பென்சிலினால், விரைவாக வரைபடங்களை வரைய வேண்டும்.

கட்டமைப்பு வினாக்கள் 4ற்கும் முதல் ஒரு மணித்தியாலத்தில் விடையளிப்பது மிகவும் முக்கியமானது இல்லாவிட்டால் கட்டுரை,வினாக்களுக்கு, விடையளிப்பதற்கான நேரத்தினை இதற்கு செலவிட வேண்டியிருக்கும் குறிப்பாக முதற் தடவையாக பரீட்சைக்குத் தோன்றும் பரீச்சார்த்திகள் பிழைவிடும் விடயம் இதுவேயாகும் அண்மைக்கால புள்ளி வழங்கும் திட்டத்தினை ஆராய்ந்து பார்த்தால் சில கட்டமைப்பு வினாக்களுக்கு அதிக விடயங்களை உள்ளடக்கியவாறு விடையளிக்க வேண்டியிருப்பதோடு சில கட்டுரை வினாக்களுக்கு குறைந்த விடயங்களை உள்ளடக்கியதாக விடையளிக்க வேண்டியிருத்தல் போன்றவையாகும். இதன்படி கட்டுரை வினாக்கள் நான்கிற்கும் முதல் 2 மணித்தியாலங்களில் (1மணி 50நிமிடம் வரை) விடையளித்து முடிந்த பின் இறுதி ஒரு மணி நேரத்தினை கட்டமைப்பு வினா பத்திரத்திற்கு விடையளிப்பது நல்லதொரு முறையாகும்.

பரீட்சார்த்திகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய மற்றுமொரு விடயம் எந்தவொரு வினாவிற்கும் ஆரம்ப பகுதிக்கு புள்ளிகள் பெற்றுக் கொள்வது இலகுவானதாகும். தொடர்ந்து செல்லும் பொழுது புள்ளிகள் பெறுவது கடினமாகிவிடும். எனவே, கட்டுரை வினாக்கள் நான்கிற்கும் கொஞ்சம் கொஞ்சமாவது விடையளிப்பது முக்கியமானது ஒன்று இரண்டு வினாக்களுக்கு முழுவதுமாக விடையளிப்பதை விட இது புத்திசாலித்தனமான விடயமாகும் நான்கு வினாக்களுக்கு விடையளிப்பதை விடுத்து 5 வினாக்களுக்கு விடையளிப்பது அவ்வளவு பயன் தராத விடயமாகும்.

கட்டுரை வினாப் பத்திரத்தில் 6 வினாக்களில் 4இனை தேர்வு செய்ய வேண்டியிருப்பதோடு இங்கு மிகவும் இலகுவாக விடையளிக்க கூடிய வினாவிற்கு (உ-ம் சிறுகுறிப்பெழுதுதல்) முதலில் வினாவிற்கு குறிப்பெழுதுதல்.

விடையளியுங்கள் இது பரீட்ச்சாத்தியின் ஆத்ம சக்தியினை பரீட்சை மண்டபத்தினுள் அதிகரித்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். பரீட்சை நெருங்கும் போது சிலர் அந்த கேள்வி வரலாம். இந்த கேள்வி வரலாம் என்று எதிர்வு கூறலினை மேற்கொள்கிறீர்கள் அவ்வாறு செய்யப்போய் பிரச்சனைகளில் மாட்டிக் கொள்ளலாம். உதாரணமாக அவ்வாறு எதிர்வு கூறிய பரீட்சைக்கு முன்பாக அது பற்றி அதிகம் அவதானம் செலுத்திய பகுதியொன்றிலிருந்து கடினமான வினாவொன்று கேட்கப்பட்டிருந்தாலும் அதற்கு விடையளிப்பதற்கு அக் குறிப்பிட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சார்த்திகள் தானாகவே உந்தப்படுவார்கள். மேலும் அவ்வாறு எதிர்பார்த்திருந்த பகுதியில் வினாவேதும் கேட்கப்படாவிட்டால் அப்பரீட்சார்த்தி நிராசை அடைந்து ஏனைய வினாக்களுக்கும் விடையளிக்கமுடியாத ஒரு சஞ்சல நிலையினை எய்தக் கூடும்.

கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும் போது விரைவில் குறிப்பிடப்பட்டிருப்பதை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும் விசேடமாக பெயரிடுக விபரிக்குக, கலந்துரையாடுக, காட்டுக போன்ற பல்வேறு வசனங்கள் சொற் பதங்கள் உள்ளன. இவற்றிற்கிடையே சிறு சிறு வேறுபாடுகள் உள்ளன. பெயரிடுக,பட்டியலிடுக என கேட்கப்பட்டிருக்கும் போது பெயரினையோ பட்டியலினையோ குறிப்பிடுவது போதுமானதாகும். விபரிக்கும் படி கேட்டிருந்தால் விபரிக்க வேண்டும். உதாரணமாக மனிதனின் காதினை விபரிக்கும் படி கேட்டிருந்தால் மனிதனின் காதின் வரைபடத்தினை வரைந்து விபரிக்க முடியும் வரைபடத்தினை வரையும் போது அதனை விரைவாக மேற்கொள்ள வரைபடத்திற்கு குறைந்த புள்ளிகளே வழங்கப்படுகின்றது. எனினும் கட்டமைப்பு, வட்டம் போன்றவற்றை விபரிக்கும் போது வரைபடத்தின் மூலம் அதனை இலகுவாக மேற்கொள்ளமுடியும்.

அதே போன்று ஒரேயடியாக விடையளிக்க கூடிய வினாக்களுக்கு முதலில் விடையளியுங்கள் அதிக புள்ளிகளை பெறுவதற்கு இது காரணமாக அமையலாம். நினைவில் வைத்திருக்க வேண்டிய இன்னொரு விடயம் என்னவென்றால், ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் எழுதாமல், விடயங்கள் பலவற்றை எழுதுவதாகும். ஒரு வருடத்தில் உயிரியல் தொழில் நுட்பத்தின் நுண்ணங்கிகளை (micro organism) இன் பாவனையை விபரிக்குக" என்று ஒரு விடை இடம் பெற்றிருந்தது. இங்கு யோகட் தயாரிப்பு படர்,சீஸ்,பாண்,நார்,அமினோ அமிலம் சேர்ந்து அதிக எண்ணிக்கையில் எழுதும் போதே அதிக புள்ளிகள் கிடைக்கப்பெறும் இங்கு ஒரு விடயத்தை அதிகம் விபரிக்க முற்படுவது தேவையற்றதாகும்.

வினாப்பத்திரத்தை கையில் எடுத்தவுடன் முதலில் செய்ய வேண்டியது : எந்தவொரு வினாப்பத்திரத்தையும் கையில் எடுத்தவுடன் முதலில் மேலோட்டமாக வாசியுங்கள். பல்வேறு வினாக்களில் முடிந்தவரை இலகுவானதொன்றிற்கு முதலில் விடையளித்து விட்டு கடினமான வினாக் களுக்கு விடையளிப்பதற்கு நேரத்தை மிகுதிப்படுத்துங்கள். கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும் போது வினாவினை சரிவர வாசித்து முதலில் வினாவினை சரிவர புரிந்து கொள்ளுங்கள். வாசிப்பதில் பிரச்சனை இருந்தால் வினாவின் முக்கிய பகுதிகளுக்கு கோடிடுக. தேவையானால் அண்ணளவாக வரைபடமொன்றினை விடயளிப்பதற்கு முன் உருவாக்கி கொள்ளுங்கள்.

உதாரணமாக காபோவைதரேட்டினை உணவாக எடுக்கும் போது உடம்பினுள் நடைபெறுவனவற்றை விபரிக்குக என வினாவொன்று கேட்கப்பட்டிருந்தால்... வாயினுள்.... வாய்க்குழியினுள்..... இரப்பையில்..... போன்றவாறு சுருக்கமாக குறித்து கொண்டு விடையளிக்க ஆரம்பியுங்கள் ஏதாவதொரு விடையின் பகுதியொன்று கடினம் என்று உணர்ந்து கொண்டால் அப்பகுதிக்கு இடத்தினை ஒதுக்கிவிட்டு ஒதுக்கி விட்டு மற்றைய பகுதிக்கு விடையளியுங்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும் போது மாணவ / மாணவிகளால் பெரும்பாலும் செய்யப்படும் / தவறுகள் விடப்படும்.

அநேக சந்தர்ப்பங்களில் மிகவும் இலகுவான விடயத்தை குறிப்பிட மறந்து போகுதல் சுவாசம் தொடர்பான வினாவில் சுவாசப்பைகள் 2 உள்ளன என்று எழுதுவதற்கு சில பரீட்சார்த்திகள் மறந்து விடுகின்றனர். ஒரே சமமான சொற்கள் இருந்தால் அந்த சொற்கள் யாவற்றையும் குறிப்பிடுவது முக்கியமானதாகும் புள்ளியிடும் திட்டத்தில் எந்த சொல் இருந்தாலும் புள்ளிகளை பெற்றுக்கொள்ளலாம். இன்னொரு வருடமொன்றில் "Hachayar de kacha kasi இன் Prothallium பச்சை நிறமானது என்பதற்கு புள்ளி வழங்கப்பட்டிருக்கலாம் இன்னுமொரு வருடத்தில் பச்சையுருமணி உள்ளது என்பதற்கு புள்ளி வழங்கப்படலாம். எனவே Hachayarda Kachakasi இன் prothallium பச்சை நிறம், பச்சயஉருமணி உள்ளது தற்போசனை கொண்டது, ஒளித்தொகுப்பாக்கி, போன்ற ஒரே சமமான சொற்கள் யாவற்றையும் குறிப்பிட்டிருத்தல் முக்கியமானது எனினும் தற்போசனை பிற போசனை என்று ஒன்றுக்கொன்று எதிர்கருத்துக்கள் கொண்ட சொற்களை எழுத வேண்டாம்.

எப்போதும் ஆசிரியர் வழிகாட்டல் கைநூலில் உள்ள விடயங்களையே எழுதுவது முக்கியமானது கடந்த வருடம் "Desmasoma Joint" என்று குறிப்பிடப்படுவதற்கு சொற்களை சுருக்கி எழுதுவது பொருத்தமற்றது.

சில வேளைகளில் உரித்தான விடயங்களை குறிப்பிடத் தவறியுள்ளது தெரிய வந்துள்ளது. உதாரணமாக External intercostal muscle என்றும் cartilage ring என்பதற்கு பதிலாக (பூரணமற்ற) கசிவிழையம் என்றவாறு குறிப்பிட வேண்டியிருக்கும் எனினும் இவற்றை பற்றி மீண்டும் விபரிப்பதற்கு தேவையில்லை.

அவ்வாறே வினாக்களுக்கு விடையெழுதும் போது 1, 2, 3 என்று இலக்கமிட வேண்டாம் விடயங்களை எழுதும் போது பந்தியாக எழுதுவது பொருத்தமானது ஆகும்.

பரீட்சை நெருங்கும் போது சிலர் நித்திரை விழித்து கற்றின்றார்கள். இக் காலங்களில் கற்பது எவ்வாறு என்பதற்கான ஆலோசனைகள் இதோ.

கற்கும் முறை நபருக்கு நபர் வேறுபட்டதாகும். இது தான் முறை என்று தரப்படுத்த முடியாது சிலர் இரவு நேரத்தில் படிக்கின்றனர். எனினும் ஒரேயடியாக நித்திரை விழித்து பரீட்ச்சைக்கு முதல் நாள் அன்று படிப்பது அவ்வளவு புத்தி சாலித்தனமான விடயமில்லை பரீட்ச்சைக்கு முதல் நாளன்று முழுப் பாடத்திட்டத்திலும் குறிப்புக்களை ஒரு தரம் பார்த்துக் கொள்ள முடியுமென்றால் சிறந்தது. நீங்கள் தயாரித்து வைத்துள்ள சிறு குறிப்புக்களை இதன் போது உபயோகிப்பது சிறந்ததாகும்.

மற்றவர்கள் சொல்வதை நம்ப வேண்டாம் அது தொடர்பாக அவதானம் செலுத்தவும் வேண்டாம் ஒருவர் இது வரை செய்து வந்த கற்றல் செயற்பாடுகள் யாவும் அவ்வாறான விடயங்களால் பயனற்று போய் விடலாம் பரீட்சைக்கு குறுக்கு வழி இல்லை என்பதை நன்றாக ஞாபகம் வைத்து கொள்ளுங்கள். தேவையற்ற அழுத்தங்களுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டாம். இதற்கு மேலதீகமாக கிடைக்கப்பெற்றுள்ள காலத்தினுள் உங்களுக்கு தேவையான அறிவினை பல தரம் வாசித்து நன்றாக கிரகித்துக் கொள்ள வேண்டியிருக்கும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு பரீட்சையை வினாத்தாளுக்கு விடையெழுதி முடித்த பின் மற்றவர்களுடன் அதன் சரி பிழைகளைப் பற்றிய பிற் கலந்தாய்வுவினை மேற்கொள்ள வேண்டாம் ஏனெனில் புள்ளி வழங்கும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடைகள், உங்கள்சகமாணவ நண்பர்கள் யோசிக்கும் முன்வைக்கும் விடைகளாக இல்லாமலிருக்கலாம் எனவே ஒரு பரீட்சை வினாத்தாள் முடிந்த பின் அதுபற்றி மறந்து விட்டு அடுத்து வரவிருக்கும் பரீட்சை வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு நன்றாக தயாராகுங்கள்.

இறுதியாக இம்முறை பரீட்ச்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் யாவரும் நன்றாக விடையளித்து உயர் பெறுபேறுகளை பெறுவதற்கான சக்தி,மனோபலம்,கிடைக்க வேண்டி ஆசீர் வதிக்கின்றேன்.

## EINSTEN QUIZ 02

### வெற்றியாளர்கள்

கடந்த இதழில் கேட்கப்பட்ட EINSTEN QUIZ 02 கேள்விக்கு சரியான விடையளித்த மாணவர்கள் சிலர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்

**A. Majurageerthan**
2014 Maths
Jaffna Hindu College

**S. M. Safraaz**
2015 Biology
Kurungal

**A. M. Sabreena**
2014 Biology
B/Muslim Ladies College

**R. Rajeevan**
2014 Maths
Ratmalana Hindu College

# EINSTEN QUIZ

### கேள்வி

இரண்டு நட்சத்திரங்கள் தமது திணிவு பொது மையத்தை மையமாகக் கொண்டு சுழல்வதை படம் காட்டுகிறது. நட்சத்திரதிணிவுகள் 3M, M அவற்றிற்கு இடையான தூரம் d ஆகும். 3M திணிவுடைய நட்சத்திரத்தின் சுழற்சிக்காலத்தைக் கணிக்குக.



இக்கேள்விக்கான சரியான விடையினை 15/03/2015 ற்கு முன்னர் தபால் மூலம் எழுதியனுப்பிவைக்கவும்.

கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து விபரமான விடையுடன் எழுதி அனுப்புங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**
இதழாசிரியர்,
G Venture Publication
44, 1/1, Venderwert Place, Dehiwela.
மாணவர்களது விபரங்கள் அடுத்த இதழில்.....

## EINSTEN QUIZ 03

Name : ..............................

Grade : ..............................

School : ..............................

District : ..............................

Postal Address : ..............................

E-mail : ..............................

Contact No. : ..............................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூழல் மாசடைதல்



**Dr. D. M. Surathissa**
Dept. Zoology
University of Colombo

> **மாசடைதல்**
> சூழலில் உள்ள பொருட்கள் அல்லது இல்லாத பொருட்களை சூழலுக்கு ஒவ்வாத அளவில், சூழலுக்குள் வெளியேற்றுவது சூழல் மாசடைதலாகும் சூழல் மாசடைவதில் மனிதன் தனது அறியாமையினால், நேரடியாகவோ, மறைமுகமாகவோ பங்களிப்பு செய்கின்றான்.

உக்காத பொலித்தீன் வகைகள் சூழலுக்குள் சேர விடுவதால் மனிதன் நேரடியாகவோ சூழலின் மண் தொகுதியின் மாசடைவதற்கு பங்களிப்பு செய்கின்றன்.

CFC போன்ற வாயு வகைகள் வளிமண்டலத்திற்குள் விடுவிப்பதால், மறைமுகமாக வளிமண்டலம் மாசடைவதற்கு பங்களிப்பு செய்கின்றான்.

மனிதரால் இவ்வாறு சூழல் மாசடைவதற்கு பங்களிப்பினை வழங்கும் பிரதானமான மாசுக்கள், மூன்று வகைகளாக சூழலுக்குள் ஒன்று சேர்கின்றன.

1. இயற்கையாக சூழலில் கிடைக்கப்பெறுவதுடன் மனிதனின் இடையூறில் சூழலுக்குள் ஒவ்வாத அளவில் விடுவிக்கப்படும் மாசுக்கள்

   உ-ம் : $CO_2$

2. இயற்கையான சூழலில் கிடைக்கப்பெற்றதும், மனிதனின் இடையூறில் சூழலுக்குள் விடுவிக்கப்படும் மாசுக்கள்.

   உ-ம் : பூச்சிக் கொல்லிகள்

3. மனிதனுக்கு நஞ்சாக விட்டாலும் மனித சூழலுக்கு விடுவிக்கப்படும் சூழல் செயற்பாட்டிற்கும் தாக்கம் விளைவிக்கும் மாசுக்கள்

   உ-ம் : CFC

அவ்வாறான மாசுக்கள் மூலம், நாங்கள் வாழும் சூழலானது பிரதானமாக மாசடைதல் சில

1. நிலத் தொகுதியிலானது மாசடைதல், மண் மாசடைதல்
2. நிலம் மாசடைதல்
3. வாயு மாசடைதல்
4. வெப்ப மற்றும் ஒலியிரலான மாசடைதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி ஒவ்வொரு விதமான சூழல் மாசடைவது எவ்வாறு என்றும் அதன் பிரதி பலன்கள் பற்றியும் ஆராய்வோம்

## நில வாழ்விடம் மாசடைதல்

a) காடழிப்பு

மனிதனின் அடர்த்தி அதிகரிக்கும் போது, அவன் பௌதீக சூழலிலுள்ள தாவரங்களை அதிகமாக உபயோகிப்பதற்கு முற்படுகின்றான். ஆரம்பத்தில் வீடு கட்டுவதற்கு மட்டும் மரங்களை வெட்டிய மனிதன், தொழில் நுட்பத்தின் வளர்ச்சியுடன் பல்வேறு கைத்தொழில்களுக்கும் (கடதாசி) மரங் களை பாவிப்பதற்கு முற்பட்டான்.

காடுகள் ஒரு வளமானாலும் மீள் பிறப்பிக்கப்படும் (Regeneration) விட அதிகமான வேகத்தில் உபயோகிப்பதால் பல்வேறு இடை விளைவுகள் ஏற்படுகின்றன. காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் தீய விளைவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. காடுகள் அழிகப்படுவதால் அநேகமான அநேகமான தாவர, விலங்கு பக்டீரியா, பங்கசு ஆகியவற்றின் வாழ்விடங்கள் அழிவடைந்து அவற்றின் அடர்த்தி குறைவடைதல்/ அழிவடைதல் போன்ற ஆபத்திற்கு பயன்படுகின்றன.
2. தாவரங்கள் அழிவடைதல் வளி மண்டலத்திலுள்ள $Co_2$ வின் செறிவு அதிகரிப்பதால் ஏற்படும் தீய விளைவுகள்.
3. காடழிப்பில் மழை வீழ்சிக் குறைவடைவது நிலத்தடி நீரின் அளவு குறைவடைவதால் ஏற்படும் நீர்ப் பற்றாக்குறை.

**b) பாலைவனமயமாக்கல்**

பாலவனமானது இயற்கையான இயற்கை சூழல் தொகுதியாக்கப்பட்ட அமைப்பு எனினும் சில பிரதேசங்களில் அகற்றப்படுவதால் இயற்கை நீரின் சதவிகிதம் குறைவடைந்து மழைவீழ்சி குறைவடைவதால் தாவர வளர்ச்சிக்கு தேவையான நீரானது கிடைக்கப் பெறுமானால் அப் பிரதேசமானது காடுகளிலான கவசமாற்றாகி விடுகின்றது. இப்பிரதேசத்தினுடாக வீசும் காற்றிலிருந்து மண்துணிக்கைகள் பாதுகாக்கப்பட முடியாததால், களிமண், மணல் போன்றவை தூசு முகிழ்கழாக வெளியேறி, அடர்த்தியான மண் வகைகள் மட்டும் எஞ்சுகின்றன. இச்செயற்பாடானது காடழிப்பு, உப்பாடுதல் காலநிலை மாற்றம் போன்றவற்றில் நடைபெறும்.

a) பூச்சி நாசிகள்

இவற்றிலான மாசடைதலில் சூழலுக்கு போசனை பதார்த்தங்கள் வழங்கப்படும் சமநிலை குழப்பப் படுவதாகும் பூச்சி நாசினிகள் முற்குறிப்பிட்டவாறு வேறுவகையான மாசடைதலைக் காட்டுகிறது. பூச்சி கொல்லிகளை முக்கிய வடிவங்கள் சிலவற்றை இனங்காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பீடை நாசிகள் : இது முக்கியமாக தேவையற்ற புல் பூண்டுகளை அழிப்பதில் பங்களிக்கிறது.
2. பங்கசுக் கொல்லிகள் : இது தேவையற்ற பங்கசுக்களை கொல்ல உதவுகிறது

மேற்கூறிய யாவும் இயற்கை சூழலில் இல்லாததும் தொடுக்கப்பட்டவையாகும்

பூச்சி கொல்லிகளில் ஏற்படும் சேதங்களை கருத்திற்கொள்வதற்கு முன், அவற்றில் ஏற்படும் அனு கூலங்களை கருதும் போது அவற்றை கீழ் குறிப்பிட்ட வடிவில் காணமுடியும்.

1. நோயினைப் பரப்பும் மனிதனுக்கு தொந்தரவு செய்யும் பூச்சி வகைகள் அழித்தல்.
2. மனிதனின் உணவு வகைகளோடு போட்டிப் போடும் பூச்சி வகைகளைஅரித்தல்

பூச்சி நாசினிகளை உபயோகிகிப்பதால் ஏற்படும் தீய விளைவுகள்.

1. பூச்சிகளில் எதிர்பு வடிவங்களை ஏற்படுத்தி கொள்ளுதல்.
